Name : I.Ganesan

College : Arasan Ganesan

Polytechnic College.

Sivakasi

II Year C.Technology

Roll No.15705

# * Science and Progress*

## அறிவியல்

அறிவியல் சிறு சிறு விளையாட்டுகளின் விளைவினால் உருவானதாகும். அறிவியல் என்பது மனிதனின் அறிவைப் பற்றி படிக்கக் கூடியதாகும். நாம் அறிவியலை பயன்படுத்தி தான் புவி சார்ந்த மற்றும் புவி சாராத தகவல்களைப் பற்றி அறிய முடிகிறது. எனவே அறிவியல் என்பது மனிதனின் வாழ்க்கையில் மிகவும் அவசியமான ஒன்றாக கருதப்படுகிறது. அந்த அறிவியலை பயன்படுத்தி பல அறிவியல் அறிஞர்கள் பல கண்டுபிடிப்புகளை பயன்படுத்தி சாதனை படைத்துள்ளது. அந்த கண்டுபிடிப்புகளால் அறிவியல் எவ்வாறு வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை பற்றி விரிவாகக் காண்போம். அந்த அறிவியல் வளர்ச்சியில் மனிதனின் வாழ்க்கையில் எப்படி வளர்ச்சி அடைந்தது என்பதைக் காண்போம்.

## அறிவியலின் வளர்ச்சி:

அறிவியல் வளர்ச்சியடைவதற்கு அறிவியல் வல்லுநர்கள் தான் முக்கிய காரணம். அன்றைய கால கட்டத்தில் இருந்து இன்றைய காலகட்டம் வரை அறிவியல் வளர்ந்து கொண்டே தான் வருகிறது. முந்தைய காலத்தில் வல்லுநர்கள் தனக்கு கிடைத்த சிறு சிறு பொருட்களை பயன்படுத்தி அதனை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தனர். இதற்கு உதாரணமாக Gramophone கண்டுபிடித்த Email Berlinerயை எடுத்துக் கொள்ளலாம். அவர் தன்னைச் சுற்றியுள்ள பொருட்களை எல்லாம் பயன்படுத்தி அதனை ஆராய்ந்து சிறு சிறு மாற்றங்களை செய்து Gramophone உருவாக்கினர்.

இன்றைய காலத்தில் அறிவியல் வல்லுநர்கள் தினமும் புதியப் புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து வருகின்றனர். அறிவியல் வல்லுநர்கள் மட்டும் கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்கவில்லை. இளைஞர்கள் மற்றும் மாணவர்களும் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு உதாரணமாக விருதுநகர் மாவட்டத்தில் பள்ளி மாணவர்கள் திரையரங்குகளில் படம் திருடப்படுவதை தடுக்க புதிய அறிவியல் கண்டுபிடிப்பை பயன்படுத்தி உள்ளனர். நான் அறிந்த மற்றொரு கண்டுபிடிப்பு அதிக மின்சாரத்தை பயன்படுத்தி சிறிய வடிவில் நாணயத்தை எவ்வாறு சுருக்கலாம் என்பது தான். அதனை கண்டுபிடித்தவர்கள் அமெரிக்க நாட்டை சேர்ந்த இரு அறிவியல் அறிஞர்கள். அமெரிக்காவில் அறிவியலை மேலும் எவ்வாறு வளர்ச்சியடைய செய்யலாம் என்பதை பற்றி ஆராய்ச்சிகள் தினமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## விண்வெளியில் அறிவியல் :

விண்வெளியில் அறிவியல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே தான் செல்கிறது. மனிதன் தோன்றிய காலத்தில் அவனுக்கு விண்வெளியில் பற்றிய தகவல்களை அறிய விரும்பியதன் காரணமாக விண்வெளி ஆராய்ச்சி தோன்றியது. கலிலியோ போன்ற அறிவியல் அறிஞர்கள் விண்வெளி பற்றிய ஆராய்ச்சிகளை அன்றே ஆரம்பித்து விட்டனர். கலிலியோ தன் தொலை நோக்கியால் உலகம் உருண்டை வடிவமானது என்று மக்களுக்கு உணர்த்திக் காட்டினர்.

அதன் பிறகு பல அறிவியல் அறிஞர்கள் சூரிய குடும்பத்தை பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தனர். பூமியை சுற்றி நிலா சுற்றி வருகிறது என்பதையும் அறிந்தனர். அந்த நிலவிற்கு சென்று வர Rocket என்ற அறிவியல் வான் ஊர்தியையும் கண்டுபிடித்தனர். அதன் பிறகு உருவாகியது தான் Satellite என்று செயற்கை கோள். இதன் மூலம் புவியில் இருந்தபடியே விண்வெளியிலும் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ச்சி செய்து வருகின்றனர். Satellite மூலம் கடலில் ஏற்படும் மாற்றங்களை பற்றியும் அறிய முடிகிறது. இதனால் மீனவர்களுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது. எனவே அறிவியல் வளர்ச்சியடைய நாமும் நம்மால் முடிந்தவரை செயல்பட்டு அறிவியல் வளர்ச்சி அடைய பாடுபடுவோம்.